දුරකථන ) 011 2669192 , 011 2675011
தொலைபேசி ) 011 2698507 , 011 2694033
Telephone ) 011 2675449, 011 2675280

ෆැක්ස් ) 011 2693866
பெக்ஸ் ) 011 2693869
Fax ) 011 2692913

විද්‍යුත් තැපෑලල )
மின்னஞ்சல் முகவரி ) postmaster@health.gov.lk
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல ) FHB/AH/GEN/2016
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 09 /11/2016
Date )

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

பொது சுற்று நிருப இல :- 01-63/2016

சகல மாகாண செயலாளர்கள்- சுகாதாரம்,

சகல மாகாணப் பணிப்பாளர்கள் சுகாதார சேவைகள்,

சகல பிராந்திய பணிப்பாளர்கள் சுகாதார சேவைகள்,

சகல பணிப்பாளர்கள்/மருத்தவ தலைவர்கள்/பொறப்பாளர் மருத்துவ நிறுவனங்கள்

சகல பணிப்பாளர்கள் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்,

பணிப்பாளர், தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனம்,

பிரதான சுகாதார மருத்தவ உத்தியோகத்தர், நகராட்சி மன்றம், கொழும்பு,

சகல சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள்

## குழந்தை மருத்துவ பராமரிப்பினை 14 வயது வரை உயர்த்துவதற்கான ஏற்பாடு

உலக சுகாதார ஸ்தாபனம் 10 தொடக்கம் 19 வயதுள்ள வகுப்பினரை யௌவனப் பராயத்தினராக வரையறுத்துள்ளதுடன் குழந்தைப்பராயத்தினரின் வயதிற்கு பின்னரும் முதுமை நிலை வயதினருக்கு முன்னருமான இக்காலம் விரைவான வளர்ச்சிக்கும் விருத்திக்குமான காலமாகும். இக்காலமானது தனித்துவமான உயிரியல் ரீதியான மற்றும் உளவியல் சமுக மாற்றத்திற்குமான காலம் என்பதனால் இது தொடரான நிலை மாற்றம், தேடுதல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்கு இட்டுச் செல்லும். கூடுதலான இளம் பராயத்தினர் வெளிப்படையாக ஆரோக்கியமாக இருந்தாலும் அவர்கள் பல்வேறு ஆபத்து நிலைகளிற்கு வெளிப்படுத்தப்படுகிறார்கள் இது ஆரோக்கியமற்ற நிலைக்கும் இறப்பிற்கும் இட்டுச்செல்லும்.

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வயதிலும் மருத்துவ மற்றும் விருத்தி நிலைகளிற்கு பொருத்தமான பராமரிப்பினை பெற்றுக்கொள்ளும் போதே உயர்வான ஆரோக்கிய பராமரிப்பு அடையப்படுகிறது. திட்டமிட்ட ஆரோக்கியம் தொடர்பான பராமரிப்பின் மாற்றமானது சகல யௌவனப்பருவத்தினரின் வாழ்நாள் முழுவதற்குமான செயற்பாடுகள் மற்றும் சுகநலன்களிற்கு மிகவும் முக்கியமானது. இவ்நிலைமாற்ற செயற்பாடுகள் ஒரு மனிதன் யௌவனப்பருவத்திலிருந்து முதுமைநிலையினை அடையும் போது உயர் தரத்திலான விருத்திக்குப் பொருத்தமான ஆரோக்கியம் தொடர்பான பாதுகாப்பு சேவையினை தடையின்றி வழங்குதலினை உறுதிப்படுத்துவதை உள்ளடக்குகிறத . ஆகவே சரியான நேர நிலைமாற்றத்தின் போது குழந்தை நிலையிலிருந்து முதுமை நிலையினை நோக்கிய சுகாதார பராமரிப்பு மிகவும் முக்கியமானது.

கூடுதலான அபிவிருத்தியடைந்த நாடுகளில் குழந்தைப் பருவத்திலிருந்து முதுமை நிலை நிலைமாற்றத்திற்கான பராமரிப்பிற்கான வயதெல்லை 14 வருடத்திற்கும் 18 வருடத்திற்குமிடைப்பட்டதாக வேறுபடும். ஆய்வுகளின் படி இந்நிலைமாற்றத்திற்கான சரியான காலப்பகுதி வளர்ச்சி முற்றாக நிறைவுற்ற அல்லது பூப்பெய்தலின் பின்னராக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது ஏனெனில் முதியோர் சேவைகள் போதுமனளவில் வளர்ச்சி மற்றும் விருத்தியினை நோக்காக கொண்டதாக இல்லை.

விரைவான உடல் மற்றும் உள வளர்ச்சி 17 வயது அடையும் போது எய்தப்படும் எனினும் உயர்ந்த மூளை வளர்ச்சி இருபதுகளின் கால நடுப்பகுதியிலேயே ஏற்படுகிறது. இந்த நிலை மாற்றத்தின் போது இளவயதான நபர் முதியவர்களின் சிகிச்சை நிலையங்களில் பங்குகொள்ளக்கூடியளவிற்கு தங்களுடைய நோய்நிலைமையை திறமையாக கையாளுவதற்குத் தேவையான கல்வியினையம் திறமைகளினையும் பெரியளவில் பெற்றோர்கள் மற்றும் ஊழியர்களின் உதவியின்றி விருத்தி செய்யக்கூடியதாகவிருகக வெண்டும்.

தற்போது இலங்கையிலுள்ள சூழ்நிலையில் 12 வயதில் குழந்தைப் பராமரிப்பிலிருந்து வயது வந்த நிலையினை அடையும் போது அவர்கள் 12 வயது பிறந்த தினத்தினை பூர்த்தியடைந்தவுடன் வயது வந்தோர்களிற்கான சிகிச்சை நிலையங்கள் அல்லது வாட்டுக்களில் கூடியளவிலான வயது வந்தோருடன் கவனிக்கப்படுகின்றனர் அது குழந்தைக்கு ஓர் அசௌகரியமான சூழ்நிலையினை ஏற்படுத்தும். இவர்கள் தற்போதும் உடல் மற்றும் உள ரீதியாக வயதானவர்களிற்கான கவனிப்பினை பெற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாகவில்லை. மேலும் 10-14 வயதிற்கிடைப்பட்ட ஆரம்ப கால யௌவனப்பருவத்தில் பூப்பெய்தல் மாற்றங்கள் ஏற்படுகின்ற போதிலும், இனப்பெருக்க மற்றும் பாலியல் தொடர்பான பிரச்சனைகள் கூடுதலாக 15 இற்கும் 19 வயதிற்குமிடைப்பட்ட யெவனப்பருவத்தின் இடைப்பட்ட மற்றும் பிந்திய காலப்பகுதியிலே அவதானிக்கப்படுகிறது.

விஞ்ஞான ரிதீயாகவும் மற்றும் நேரத்தின் தேவையினை அடிப்படையாகக்கொண்டும் மற்றும் பராமரிப்பு வழங்குவதற்கான ஏற்பாட்டியல் சாத்தியக்கூறினை கருத்திற் கொண்டு குழந்தை மருத்துவ பராமரிப்பினை 14 வயது வரை உயர்த்துவதாக தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஆறு மாத கால நடைமறைப்படுத்தலின் பின்பு தொடர்பான பங்குதாரர்களின் கருத்துகளுடன் குழந்தை மருத்துவ பராமரிப்பினை 16 வயது வரை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயப்படும். குழந்தை மருத்துவ பராமரிப்பிற்கான வயதெல்லை 01.11.2016 இலிருந்து 14 வயது வரைக்கும் உயர்த்தப்படும். யெவனப்பருவத்தினரிற்கு இவ்வயதினை அடிப்படையாகக் கொண்டு மேற்படி பராமரிப்பினை வழங்குவதற்கு தேவையான ஒழுங்குகளினை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

தொடர்பான இடங்கள் மற்றும் நிறுவனங்களில் மேற்படி அறிவுறுத்தல்கள் நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்துமாறு தங்களது சுகாதார சேவைகள் மாகாணப்பணிப்பாளர்கள், சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்கள் மற்றும் நிறுவனத்தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

Dr. P. G. Mahipala
Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
385, Rev. Baddegama ... Thero Mawatha,
Colombo 10.

.....................................................

வைத்தியர். பி.ஜி. மகிபால

பணிப்பாளர் நாயகம் சுகாதார சேவைகள்

சுகாதார, போஷணை மற்றம் சுதேஷ வைத்திய அமைச்சு

பிரதிகள் :

செயலாளர், சுகாதார,போஷணை மற்றம் சுதேஷ வைத்திய அமைச்சு

மேலதிக செயலாளர், மருத்துவ சேவைகள், சுகாதார அமைச்சு

மேலதிக செயலாளர், பொது சுகாதார சேவைகள், சுகாதார சேவைகள்

பிரதி பணிப்பாளர் நாயகம் - பொது சுகாதார சேவைகள்1 & 11, சுகாதார அமைச்சு

பிரதி பணிப்பாளர் நாயகம் - மருத்துவ சேவைகள், சுகாதார அமைச்சு

பிரதி பணிப்பாளர் நாயகம் - திட்டமிடல், சுகாதார அமைச்சு

பிரதி பணிப்பாளர் நாயகம் - கல்விப்பயிற்சி மற்றும் ஆராய்ச்சி

பிரதி பணிப்பாளர் நாயகம் - ஆய்வுகூட சேவைகள், சுகாதார அமைச்சு

தலைவர்கள் - துறைசார் கல்லூரிகள்

இலங்கைக்கான பிரதிநிதிகள் - WHO/UNFPA/UNICEF/World Bank/ World Food Programme